**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள்
**இ.ம.எண். 6/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 289/2019**

சுப்ரமணியன் ..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

1. பஜல் முகம்மது (இறந்தார்)
2. மகாதீர் முகம்மது
3. முகம்மது பாரீஸ்
4. முகம்மது அஜ்மல் ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 17.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 20.11.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து பிரதிவாதி தரப்பு ஆவணமாக ஏற்க உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கில் தனது தரப்பில் முக்கிய சில ஆவணங்களை தாக்கல் செய்ய தற்பொழுது தனக்கு சட்டக்கருத்துரை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், எனவே, அவைகளை இத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை தனது தரப்பில் ஏற்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், எனவே, ஆவணங்களை

தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து பிரதிவாதி தரப்பு ஆவணமாக ஏற்க உத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மேற்படி வழக்கில், குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் Reopen மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆவணங்கள் தாக்கல் செய்ய தற்போது மனுதாரருக்கு சட்டகருத்துரை கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் கட்சியை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் என்றும், அதனை ஏன் உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல், தற்போது காலதாமதத்துடன் தாக்கல் செய்வதற்கு எவ்வித காரணங்களும் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் அசல் ஆவணங்கள் அல்ல என்றும், அவை சான்றிட்ட நகல்கள் என்றும், அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளதால், மேற்படி ஆவணத்தை பற்றி குறுக்கு விசாரணை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், கிரய ஒப்பந்த ஆவணமானது பதிவு செய்யப்படாத காலாவதியான அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும், எனவே, இந்த மனுவை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>**தீர்வு:**</u>

5. மனுதாரர் தரப்பில், வழக்கில் தனது தரப்பில் முக்கிய சில ஆவணங்களை தாக்கல் செய்ய தற்பொழுது தனக்கு சட்டக்கருத்துரை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை தனது தரப்பில் ஏற்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், எனவே, அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல், தற்போது காலதாமதத்துடன் தாக்கல் செய்வதற்கு எவ்வித காரணங்களும் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் சான்றிட்ட நகல்கள் என்றும், மேலும் கிரய ஒப்பந்த ஆவணமானது பதிவு செய்யப்படாத காலாவதியான அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை தனது தரப்பில் ஏற்க வேண்டியது அவசியமாக உள்ளது என கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் ஆகும். அவைகளை பொறுத்து ஆட்சேபனை எதுவும் இருக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும் பொழுது ஆட்சேபனையை தக்க முறையில் பதிவு செய்யலாம். மேலும் ஆவணங்களை பொறுத்தும் அதன் உண்மை தன்மை அதில் உள்ள சங்கதிகளை பொறுத்தும் மனுதாரர் தக்க முறையில் நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் பெறப்பட்டு குறியீடு செய்யப்பட்டது என்பதாலேயே அதிலுள்ள சங்கதிகள் அனைத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாக தீர்மானிக்க இயலாது. இந்த ஆவணங்களை குறியீடு செய்வதால் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்விதமான கஷ்ட நஷ்டமோ பிரச்சனையோ ஏற்படாது. மாறாக, அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு ஏற்பட உதவிகரமாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**8. முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 20.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.20 16:33:41 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.20 16:33:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**